மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறளில் நீரியல்

## Hydrology in Thirukkural

ராஜகுமாரி. ஈ / Rajakumari[1]
[1] முனைவர்பட்ட ஆய்வாளர், இலக்குமிபுரம் கலை & அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் நீரியல் குறித்த தகவல்களை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் நீரியலை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் நீரியல் குறித்த தகவல்களை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், நீரியல்

**Abstract**

The major objective of the research is to explore the hydrology in the text of Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the the hydrology in the text of Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the hydrology in the text of Thirukkural of Tamils.

**Keywords:** Hydrology, Thirukkural

## முன்னுரை

அறம் பொருள் இன்பம் எனும் முப்பாலும் அமையப் பெற்று முக்காலத்தையும் நிலைநிறுத்தி எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஏற்றமிகு செவ்விலக்கியம் திருக்குறளாகும். இதில் இல்லாத கருத்துக்களே இல்லை எனும் அளவிற்கு அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியத் திருக்குறளை, 'ஓதற்கெளிதாகி உணர்தற்கரிதாகி வேதப்பொருளாய் விளங்குவது' என மாங்குடிமருதனார் புகழாரம் சூட்டுகிறார். அந்த வகையில் மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீரைப் பற்றியும் வள்ளுவம் அழகுற எடுத்தியம்புகிறது. 'நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே' எனும் மோசிக்கீரனாரின் மொழிக்கேற்ப நீர் மனிதனின் உயிர்நாடியாக விளங்குகிறது. திருக்குறளில் காணப்படும் நீரின் சிறப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## நீரின் சிறப்புகள்

மனிதனின் முக்கியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பனவற்றுள் முதலாவதுத் தேவை உணவாகும். உணவென்பது திடப்பொருள்களையும், நீர்மத்தையும், உள்ளடக்கியதாகும். தூயத்தண்ணீர் ஒரு தலைசிறந்த மருந்தாகும். உணவில்லாமல் பல நாள்கள் உயிரோடு வாழலாம். ஆனால் நீரருந்தாமல் அதிகநாள்கள் வாழமுடியாது. தண்ணீரின் மகத்துவத்தை உணர்ந்தே நம்முன்னோர்கள் 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று சொல்லி வைத்துள்ளனர். மேலும் 'நீர் கெடுந்தோறும் சீர் கெடும்' எனும் முதுமொழி நீரின் வளமையை வைத்தே ஒரு சமூகம் உயர்ந்த நிலைமைக்குச் செல்லமுடியுமென்று உணர்த்துகிறது. "தாயில்லாப் பிள்ளை கெடும், நீரில்லாப் பயிர் கெடும்" எனும் பழமொழி நீரை தாய்மைக்கு ஒப்பாக்குகிறது. இரண்டு உலகப்போர்களைச் சந்தித்த இவ்வுலகமானது, மூன்றாவதாக ஒரு யுத்தத்தைச் சந்திக்குமானால் அது தண்ணீரை வைத்தே ஏற்படுமென்று இயற்கை வல்லுநர்கள் கூறுகின்றனர். இறைவனே நீர் (அப்பு) லிங்கமாக திருவானைக்காவல் கோவிலில் குடிக்கொண்டுள்ளார். நீர் மேலாண்மையை அதிகரிக்க நீர்நிலைகளை உருவாக்கிய மன்னர்கள், கோவில்களிலும் திருக்குளங்களை வெட்டி நீர்மேலாண்மைக்குச் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர்.

**இலக்கியங்களில் நீர்**

நீராதாரம் சிறப்பாக இருந்தால் தான் ஒரு நாடும், நாட்டு மக்களும் சிறப்பாக வாழமுடியும். இக்கருத்தை,

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும்,
குடியுயரக் கோலுயரும் - கோலுயரக் கோன் உயரும்"
(புறநானூறு – 58)

எனும் பாடல் நீரின் சிறப்பை, ஔவையின் வாழ்த்துப் பாவாக விளக்கி நிற்கிறது. மேலும் புறநானூற்றுப்பாடலானது,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம் - உண்டிக் கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே! உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உண்வெனப்படுவது நிலத்தொடு நீரே"
(புறநானூறு – 18)

என நீரின் சிறப்பபை விளக்குகிறது. திருவாசகத்தில்,

"நீரிலின் சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட"
(திருவாசகம், திருவண்டப்பகுதி – 25)

என ஈசனே நீரின் சுவையாகத் திகழ்கிறாரென மாணிக்கவாசகர் பதிவு செய்துள்ளார்.

"பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனவே "
(அகநானூறு 252, 13 – 14)

பாடல், தாய் தன் குழந்தைகளைப் பேணிக்காப்பதுபோல நீர் நிலைகளை பராமரித்ததை நக்கணையார் பதிவு செய்துள்ளார். இதுபோல பல்வேறு இலக்கியங்களும் நீரின் சிறப்புகளைப் பதிவு செய்துள்ளன.

**மழைநீர் உயிர்நீர்**

நீரின் சிறப்பை அறிந்தே வள்ளுவரும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாக வான்சிறப்பு அதிகாரத்தைப் படைத்துள்ளார். மழை நீரானது உயிர் நீராகும். மாரியல்லாமல் காரியமில்லை. இப்புவியில் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழ்ந்து காணப்பட்டாலும், மனிதத் தேவைக்கான தண்ணீர் தட்டுப்பாடாகவே காணப்படுகின்றது. நீரே உலக செல்வங்களுக்கெல்லாம் அடிப்படை ஆதாரம். நீருக்கு ஆதாரமான மழை இல்லையென்றால் இவ்வுலகம் ஒழுக்கத்தினின்றும் தவறிவிடும். என்பதனை,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையாது ஒழுக்கு" (குறள் - 20)

எனச் சுட்டுகிறது. முறையான மழை பெய்யாவிடில் ஒழுக்கத்தின் அடிப்படைகளான தானம், தவமிரண்டும் முறையாக நடைபெறாமல் போய் விடும். மழைபெய்யாமல் வறட்சி நிலவுமாயின் பிறர்க்குதவும் உயர்ந்த குணமும் இல்லாமற்போய்விடும். இதனை வான்சிறப்பின்,

“தானம் தவம் இரண்டும் தாங்கா வியன் உலகம்
வானம் வழங்காதெனின்” (கு – 19)

எனும் குறள் நற்குணங்களுக்கு மூலாதாரமாக விளங்குவதே மழை என குறிப்பிடுகிறது. இக்கருத்தையே நான்மணிக்கடிகை,

“நீர் இடும்பை புள்ளினுள் ஓங்கல் அறியும்” (நான் மணிக்கடிகை – 97)

என்ற அடி மூலம் குறிப்பிடுகிறது. மேலும்,

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு” (கு – 18)

எனும் குறள் ஒழுங்காக மழை பெய்யாமல் போனால் வானத்துத் தேவர்களுக்கு நடத்தும் திருவிழாக்களும், தினந்தோறும் நடக்கும் வழிபாடுகளும் நடைபெறாமல் போய்விடுமென்று மழையின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

மழை பொழிவதாலேயே உலக உயிர்கள் நிலைத்து வாழ்கின்றன. மழைநீரானது உயிர்களுக்குச் சாவா மருந்தான அமிழ்தம் போன்றதென,

“வான் நின்று உலகம் வழங்கி வருதலால்தான்
அமிழ்தம் என்றுணரல் பாற்று” (குறள் - 11)

என குறள், மழையை அமிழ்தமாக உயர்வாய்க் கூறுகிறது. மேற்கூறிய கருத்துக்களையே பகவான் கிருஷ்ணர், மழையிலிருந்தே உணவு உற்பத்தியாகிறதெனவும், வேள்விகள் மூலம் மழை பொழிவதாகவும் பகவத்கீதையின் கர்மயோகப் பாடலில்,

“அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாதன்ன ஹம்பவ:1
யக் ஞாத்பவதி பர்ஜன்யோ யக்ஞ: (கர்மயோகம் - 14)

எனும் அடிகள் மூலம் விளக்குகிறார்.

மழை, உண்பவர்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை விளைவித்து தானும் ஓர் உணவாகப் பயன்படுகிறதென வான்சிறப்புக் குறள்,

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை” (குறள் - 12)

என பதிவு செய்துள்ளது. மேலும் பருவமழை பொய்க்குமாயின் இவ்வுலகம் பசியால் வாடுமெனவும், (கு – 14), மழை பெய்தால் தான் சிறு புல் கூட முளைக்குமெனவும் (கு – 16), உரியகாலத்தில் பெய்யாமல், பாழ்பட்டு போன உயிர்களை உயிரூட்டுவதும் மழையெனவும் (கு – 16), கடல்நீரை ஆவியாக்கி பெய்யும் மழையானது பெய்யாமல் போனால் இப்பரந்த சமுத்திரமே தன் வளமையிலிருந்து குன்றி விடுமெனவும் (கு – 17) குறிப்பிட்டு, நீருக்கு ஆதாரமான மழையின் சிறப்பைக் குறள் விளக்குகிறது.

**குறள் வழி நீரின் சிறப்புகள்**

எந்தப் பிரதிபலனுமின்றி சான்றோர்கள் செய்யும் கைம்மாறு கருதாத உயர் குணத்திற்கு நிகரானது, கைம்மாறு கருதாமல் பெய்யும் மழையெனவும் (கு – 211), உலகத்தார் விரும்பும் வண்ணம் உதவிகள் செய்யும் பேரறிவாளனுடைய செல்வத்திற்கு ஒப்பானது, ஊரின் நடுவே அனைவருக்கும் பயன்படுமாறு அமைந்திருக்கும் குளமெனவும் (கு – 2) ஒருவருடைய உள்ளத்து தூய்மையினை அவர் பேசும் வாய்மைச்சொற்கள் வெளிப்படுத்துதல் போல, அவருடைய புறத்தூய்மை நீரால் அமையுமெனவும் (கு – 298), உறவுகளோடு கலந்து பழகாத ஒருவருடைய வாழ்க்கையானது, கரையில்லாத குளத்திலே உள்ள தண்ணீரைப் போல பயனற்றதெனவும் (கு – 523), நிலத்தடிநீர், புவியின் மேற்பரப்பிலுள்ள நீர், ஆறுகள் போன்றவை ஒரு நாட்டின் முக்கிய உறுப்புகளாகுமெனவும் (கு – 737) நீரின் சிறப்புகளை பட்டியலிடும் குறள், பல சிறப்புகளையும் பெற்ற நீரானது உயிர்களுக்கும், உடமைகளுக்கும் துன்பத்தைத் தருமாயின் அது தீயதெனவும் (கு – 881) நீரின் பல்வேறு சிறப்புகளையும் குறள்கள் பதிவு செய்துள்ளது.

**நீர் நிலைகள்**

எவ்வளவுதான் சிறப்பாக மழை பொழிந்தாலும், அம்மழைநீரைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்காவிட்டால், மழை நீரினால் அதிகப் பயனை நாம் பெறமுடியாது. மழை இல்லாத காலத்தில் தண்ணீர் தேவைகளுக்காக நம் முன்னோர்கள் அணை, ஏரி, குளம், கிணறு, இலஞ்சி போன்ற நீராதாரங்களை உருவாக்கி நீரை சேமித்து வைத்தனர். நிலத்தில் சராசரியாக பெய்யும் மழையில் 40% கடலில் கலப்பதாயும், 35% வெயிலில் ஆவியாகுவதாகவும், 14% நிலத்தடி நீராகவும், 10% புவியின் ஈரப்பதத்திற்கு உதவி செய்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிலத்தடிநீர் மட்டம் குறைந்து வரும் நாடுகளில் நம்முடைய இந்திய நாடும் ஒன்றாகும். வள்ளுவம் நீரினை மழை, நீர், புனல், வெள்ளம், துளி, போன்ற சொற்களால் அடையாளப்படுத்துகிறது. நீர் நிலைகளான கடல். உவரி, கேணி, ஊற்று, ஊருணி, குளம், அகழி, போன்றவற்றை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். நீரின் சிறப்புப் பெயர்களாக ஊற்றுநீர், மாறாநீர், இருபுனல், தமர்நீர், தெளிநீர், மணிநீர், விரிநீர், நெடும்புனல், உள்நீர் என்றெல்லாம் பதிவு செய்துள்ளார். ஆழமான நீரை நெடும்புனல் (கு – 495) எனவும், வற்றாத கடலை மாறாநீர் எனவும் (கு – 701) நிலத்தடிநீர், மேல் மட்டநீரை இருபுனல் எனவும் (கு – 737), தலைவன் தலைவி காதலைக் காமக்கடல் எனவும் (கு – 1164), கண்ணில் உற்பத்தியாகும் நீரை கண் நீர் எனவும் (கு – 780), கண்ணிறை நீர் எனவும் (கு -1315), உள்நீர் எனவும் (கு - 1177) உமிழ்நீரை வாலெயிறு ஊறியநீர் எனவும் (கு – 1121) பலவாறு நீரைப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர்.

**நீர் மாசுபடுதல்**

மனிதர்கள் தேவையற்ற கழிவுகளை ஆறு, ஏரி, கடல், முதலான நீர் நிலைகளில் வீசுவதால் நீராதாரம் மிகவும் பாழ்பட்டு போகிறது. செயற்கை கழிவுகளால் கடலில் மிதக்கும் தீவுகள் உருவாகின்றன. நீர்வாழ் உயிரினங்கள் அதிக அளவில் அழிந்து வருகின்றன. நமக்கு

இயற்கையாகக் கிடைக்கின்ற நீரைச் சரியாக பாதுகாக்காமலும், நீராதாரங்களை முறையாக பராமரிக்காமலும், கழிவுகளைக் கொட்டுவதாலும், அங்கிருக்கும் நீரால் எவ்வித பயனுமில்லை. வெயில் படாமல் நிழலிலிருக்கின்ற நீரானது நோய்களையே உருவாக்கும். இதனை வள்ளுவம்,

“நிழல் நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்” (கு – 881)

எனக் குறிப்பிடுகிறது.

**வேளாண்மையில் நீர்**

நீரின் உயர்வை வைத்தே ஒரு நாட்டில் வேளாண்மையும் செழிக்கிறது, எவ்வளவோ கனிம வளங்கள் நிறைந்து காணப்பட்டாலும் ஒரு நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவில்லையெனில், அந்நாடு வளத்தில் பின்தங்கிவிடுகிறது. உணவு உற்பத்திக்கு அடிப்படையான வேளாண்மை, நீரை நம்பியே பெரிதுமிருக்கிறது.

ஒரு வயலில் ஏர் உழுதலை விட எரு இடுதல் நன்று. இவை இரண்டிற்கும் அடுத்தபடியாகக் களை எடுத்து நீர் பாய்ச்ச வேண்டுமென்பதனை உழவு அதிகாரத்தின் குறள்,

“ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு” (கு – 1038)

என பதிவு செய்துள்ளது. மேலும் காமநோய் அலர் தூற்றுதலை எருவாகவும், அன்னையின் கடுஞ்சொற்களை நீராகவும் கொண்டு சிறப்பாக வளர்கிறதென (கு – 147) கூறி காமநோயை பயிருக்கும், கடுஞ்சொற்களை உயிர்ஊக்கியான நீரிற்கும் ஒப்புமைபடுத்தி குறள் குறிப்பிட்டுள்ளது. வேளாண்மையில் நீரின் சிறப்பைக் குடபுலவியனார்,

“வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன் - வைப்பிற்று ஆயினும்
தண்ணி ஆளும் இறைவன் தாட்கு உதவாதே! ஆதனால் அடுபோர்ச்
செழிய இகழாது வல்லே – நிலன் நெளி மருங்கின் நீர்நிலை
பெருகத் - தட்டோர் அம்ம! இவன் தட்டோரே
(புறம் - 18; 24 – 30)

என புறநானூற்றில் பதிவு செய்துள்ளார்.

**நிறைவுரை**

வாழ்வியல் நெறிகளை வகுத்துக்கூறும் குறளானது இயற்கையின் அருங்கொடையான நீரின் சிறப்புகளையும் செம்மையுற முன்வைக்கிறது. இந்த உலகம் நீரை அடிப்படையாகக் கொண்டதென்றும், நீரானது பிறருக்குத் தானம் செய்யும், சுயநலமில்லா செல்வந்தரின் செல்வத்திற்கு ஒப்பானதென்றும், நீரானது ஒரு நாட்டை வளப்படுத்துவது மட்டுமல்லாமல், அரணாகவும் காத்து நிற்கிறதென்றும், வேளாண்மையில் நீரின் இன்றியமையாமை, பல்வேறு

நீர்நிலைப் பெயர்கள், நீரின் மாறுபட்ட அடைமொழிப் பெயர்கள் என நீரின் சிறப்பியல்புகளை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநூற்பட்டியல்**


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.